**செய்தி வெளியீடு எண்: 057** **நாள்: 22.01.2019**

## செய்தி வெளியீடு

பதிவுத்துறைக்கான ஒருங்கிணைந்த வலை அடிப்படையிலான ஸ்டார் 2.0 திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.2.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டு சிறப்பாக மேம்படுத்தப்பட்டு நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 10.12.2018 அன்று ஒற்றைச்சாளர முறையில் இந்திய நிதியமைப்புக்குட்பட்ட அனைத்து வங்கிகள் மற்றும் அங்கீரிக்கப்பட்ட பணப்பரிவர்த்தனை முறைகளிலும் பதிவுத்துறைக்கான கட்டணங்களை செலுத்தும் முறை துவக்கிவைக்கப்பட்டது. பாரத ஸ்டேட் வங்கி இதில் ஒருங்கிணைப்பாளராக செயல்படும். இம்முறையின் மூலம் இந்திய நிதியமைப்புக்குட்பட்ட அனைத்து வங்கிகளின் (58 வங்கிகள்) பற்று அட்டை (Debit Card), கடன் அட்டை (Credit Card), யுபிஐ (UPI) போன்றவற்றின் மூலம் பதிவுத்துறைக்கான கட்டணங்களை செலுத்தலாம்.

மேலும், பதிவுத்துறையின் இணையதள வழி உரிய செலுத்துச்சீட்டை தயாரித்து கட்டணங்களை offline முறையில் பாரத ஸ்டேட் வங்கி, அலகாபாத் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்தியன் வங்கி. ஐ.டி.பி.ஐ வங்கி. சிண்டிகேட் வங்கி. சென்ட்ரல் பாங்க் ஆ்ஃப் இந்தியா, பஞ்சாப் நேஷனல் வங்கி, பேங்க் ஆ்ஃப் பரோடா, யூனியன் பாங்க் ஆ்ஃப் இந்தியா, விஜயா வங்கி ஆகிய வங்கிகளின் எந்த கிளையில் வேண்டுமானாலும் நேரில் சென்று செலுத்தலாம். மேலும், ரொக்கமாக அலுவலகத்தில் நேரில் ரூ.1000/- வரையிலும், 28.01.2019 முதல் துறைக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை வங்கிகளின் வரைவோலை மூலம் ரூ.5000/- வரையிலும் செலுத்தலாம் என தெரிவிக்கப்படுகிறது.

Verified @ RealEstate™

துறைக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் அனைத்தும் மேற்படி பல்வேறு வழிகளில் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட நடைமுறைகளை பின்பற்றி ஆவணதாரர்கள் பாதுகாப்பான முறையில் துறையின் கட்டணங்களை செலுத்தி சேவைகளை பெற்றிட ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இதில் பொதுமக்களுக்கு ஏதும் சிரமங்கள் இருப்பின் பதிவுத்துறைத் தலைவர் அலுவலக கட்டணமில்லா தொலைபேசி எண்.**1800 102 5174**-ஐ தொடர்புகொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

Verified RealEstate